DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 65/2017 |
| Deposition of witness | : | PW - 1 |
| Name | : | ராஜலெட்சுமி |
| Father's /Husband Name | : | ராமமூர்த்தி |
| Village | : | இஞ்சிக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 46 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day October, 2024.
Accused produced from Judicial Custody.

**முதல் விசாரணை:–**

நான் இஞ்சிக்குடியில் வசித்து வருகிறேன். எனது கணவர் ராமமூர்த்தி ஓட்டுனராக பணியாற்றி வருகிறார். கடந்த 11.05.2020–ம் தேதி நள்ளிரவு 12.30 மணிக்கு கொல்லைபக்கம் கதவு சத்தம்கேட்டு நானும், எனது கணவரும் எழுந்து வந்து பார்த்த போது வீட்டிற்குள் நுழைந்த மூன்று நபர்களில் ஒருநபர் கையில் அரிவாளை வைத்துக்கொண்டு சத்தம்போட்டால் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். வீட்டில் இருந்த பீரோவை திறந்து பீரோவில் இருந்த நான்கு பவுன் செயின் ஒன்று, அரை பவுன் தோடு ஒன்று, இரண்டு பவுன் எடை கொண்ட வளையல் ஒன்று, பணம் ரூ.20,000/–ம் மற்றும் நகை அடகு ரசீது வைத்திருந்த பேக் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். அந்த மூன்று நபர்களில் ஆஜர் எதிரியும் ஒருவர் ஆவார். அவரை நான் சம்பவ தினத்தன்று பார்த்தேன். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டி மறுநாள் 12.05.2020–ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் எனது கணவர் ராமமூர்த்தி புகார் கொடுத்தார். எனது கணவர் கொடுத்த புகாரில் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட நகையை நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்காலமாக பெற்றுச்செல்லுமாறு கூறினார்கள். அதன்பேரில் எனது கணவர் மனு செய்து நகையை பெற்றுக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதிரி தரப்பில் எதிரியும், அவரது வழக்கறிஞரும் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாமல் விசாரணை முடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.